

# பி. பெருமாளின் வானமும் மண்ணும் ஒரே நிறம்

**இந்திரன்**

எளிமையின் மீதும், எளியவர்களின் மீதும் இருக்கும் தீராக்காதலினால் விளைவதுதான் பி. பெருமாளின் ஓவியங்கள் என்று குறிப்பிடலாம். சென்னை ஓவியக்கல்லூரியில் கிராஃபிக் பிரிவு பேராசிரியராக இருக்கும் இந்த 55 வயது நிரம்பிய ஓவியரை படைப்புத் தொழிலில் ஈடுபடச் செய்வது ஒரு எளிமையான உணர்வுதான். 'கலையின் பொருள்' என்னும் தனது நூலில் கலை விமர்சகர் ஹெர்பர்ட் ரீட் குறிப்பிடும், "தன்னைச் சுற்றி இருக்கும் அனைத்தையும் பளிச்சிடச் செய்யும் ஆசை" தான் இவர் ஓவியத்தில் ஈடுபடுவதற்கு இவரைத் தூண்டுகிறது எனலாம்.

இந்த ஓவியர் பெற்ற இளங்கலை பட்டமும், சென்னை ஓவியக் கல்லூரியிலிருந்து பெற்ற பட்டமும், காமராஜர் மாவட்டத்து இராமசாமிபுரம் என்னும் சிற்றூரில் பிறந்த இந்த ஓவியருக்குள் இன்றைக்கும் இருக்கும் கிராமத்து மனிதனை கறைபடுத்த முடியாமல் தோற்றுப் போனதின் அடையாளம்தான் இவர் ஓவியங்கள். உடைகள், பொம்மைகள், பாய்கள், வீட்டுச் சுவர்கள், தூண்கள் ஆகியவற்றை வண்ணங்களால் பலவித அலங்காரச் சித்திரங்களாக மாற்றுவதற்கு எந்த அழகியல் ஆசை காரணமாக இருக்கிறதோ, அதே ஆசைதான் இவரது உன்னத படைப்புகளை உருவாக்குகின்றன.

இளம் வயதில் கிராமத்துக் குடிசைகளின் சுவர்களை இவர் இயற்கையாக மண், இலைகள், மலர்கள் இவற்றிலிருந்து கிடைக்கும் வண்ணங்களால் ஓவியம் தீட்டி அழகுபடுத்துவதைக் கண்ட இவரது உறவினர் ஒருவர் இவரை சென்னை ஓவியக்கல்லூரியில் கொண்டு வந்து சேர்த்தார். இந்த சிறுவன் இன்று புகழ்பெற்ற ஓவியர் பெருமாளாக வளர்ந்து இருக்கிறபோது தீட்டும் ஓவியங்கள் அனைத்துமே வர்ணக் களஞ்சியங்கள்.

பறையைத் தட்டிக் கொண்டு கூத்தாடுபவர்களின் ஓவியத்தையோ, மணமக்களை சீர் வரிசையோடு கொண்டு செல்லும் ஊர்வலத்தை வர்ணிக்கும் ஓவியத்தையோ எடுத்துக் கொண்டோமானால், வண்ணம் இசை அலைகளாக எழுந்து, தூரிகையின் தைலவண்ண வீச்சு ஒரு தென்றலாக நம்மீது தடவிச் செல்வதைக் காணலாம்.

மனிதர்களின் உடம்புகள், சூரியனில் கருத்த கருநீலத் தோல்களும், பழுப்பு நிறத் தோல்களுமாகவே காட்சியளிக்கும். ஆண்கள் அரை ஆடை அணிந்தவர்கள். பெண்கள் ரவிக்கை அணியாமல் ஓராடை மட்டுமே அணிந்தவர்கள்.



இவரது கித்தான்கள் தனி மனிதர்களை மட்டுமே கொண்டதாக என்றைக்கும் அமைந்தது கிடையாது. எல்லா கித்தான்களிலும் கும்பலாக மனிதர்கள். கூட்டத்தின் ஒவ்வொரு மனிதரையும் ஒவ்வொரு குணச் சித்திர அமைப்புடன் தீட்டுவது பெருமாளின் விருப்பமான ஒன்று. இயேசுநாதரைத் தீட்டும்போதுகூட அவர் தனியாக சிலுவையில் அறையப்பட்டிருப்பதாகத் தீட்டுவதில்லை. இயேசு சிலுவையில் அறையப்பட்டிருக்கிறார். மக்கள் கூட்டம் அவரை நோக்கி மண்டியிட்டுக் கொண்டும், கைகளை உயர்த்தி பிரார்த்தனை செய்து கொண்டும், துக்கத்தால் கதறிக் கொண்டும் இருக்கிறது. தனிமைக்கு இரையாகிவிட்ட நகரத்துப்பண்பிலிருந்து விலகி, கூட்டமாக இயங்கும் கிராமத்துப் பண்பு துலங்குவது இவர் ஓவியங்கள். இது இந்த ஓவியரின் சமூக உணர்வின் அடையாளம்.

உருவங்கள் மிகவும் எளிமையாக, பழைய குகை ஓவியங்களின் சித்திரங்களைப் போன்று கண், காது, மூக்கு போன்றவற்றின் நுட்பமான விவரணைகள் அற்றவை. ஆனால் அந்த உருவங்களின் நிற்கும், நடனமாடும், அமர்ந்திருக்கும் பாவனைகளினாலேயே உணர்வுகளை நமக்கு தெரிவித்துவிடுகிறார். இவர் ஓவியங்களில் கட்டாயமாக ஏதேனும் வீட்டு விலங்கு ஒன்றாவது இடம் பெற்றுவிடும். குறிப்பாக நாய் இவரது ஓவியங்கள் பெரும்பாலானவற்றில் காணப்படும்.

ஆனால் இவரது வண்ணங்களின் தேர்வு, இயல்பானவைகளல்ல. உதாரணமாக வானம் நீலநிறமாக இருக்கிறதென்றால், அதே நீலநிறம் மண்ணுக்கும் இறங்கி இருக்கும். ஓரிடத்தில் நீலம் மஞ்சளாகவும், ஓரிடத்தில் நீலமாகவும், சில இடங்களில் எல்லா வண்ணங்களின் தொகுப்பாகவும் இருப்பதுண்டு. இதுபற்றி அவர் குறிப்பிடும்போது, "அந்த ஓவியக் கித்தானுக்குள் ஒரு வண்ண ஒழுங்கையும் (Harmony of colour) இடச் சமநிலையையும் (Spatial balance) உருவாக்குவதற்கு நான் இந்த உத்தியைக் கையாள்கிறேன்" என்று குறிப்பிடுகிறார்.

இவரது தைல வண்ண ஓவியங்கள், அவற்றின் கட்டுமானத்தைக் காட்டிலும், அவற்றிற்குள் இழையோடும்